## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 118/2022**

2024 ஆம் ஆண்டு மே மாதம் 31ம் தேதி வெள்ளிக் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஏழுமலை | தொழில் | : கூலிவேலை |
| தந்தை பெயர் | : முனுசாமி | சமயம் | : |
| கிராமம் | : மேல்பாப்பாம்பட்டி | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 35 |

சாட்சியையும் எதிரியும் ந.பி.பெற்றாள் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. லியோடைமண்ட்ராஜ் P.C. - 2391 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.)**

### முதல் விசாரணை

**1.** நான் மேல்பாப்பாம்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா1 அர்ஜுனன் அ.சா.2 சங்கீதா என் ஊர்க்காரர்கள். ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரை சார்ந்தவர்.

2. வருடம் தேதி, மாதம் ஞாபகம் இல்லை . ஒரு நாள் பகலில் யாரோ ஒருவர் காயத்தோடு ரோட்டில் வந்தார். அவரை நான் சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டு விட்டேன். அவருக்கு காபி, டீ வாங்கி கொடுத்து விட்டு சென்றுவிட்டேன். வேறு எதுவும் தெரியாது.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

### அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலிசார் விசாரணையில் கடந்த 10.05.2022 ந் தேதி மாலை 03.30 மணியவில் v எங்கள் ஊரில் உள்ள அர்ஜுனன் வீட்டின் அருகே நடந்து சென்ற போது சின்னக்கண்ணு குடும்பத்திற்கும் அர்ஜுனன் குடும்பத்திற்கும் வீட்டு மனை சம்மந்தமாக இருந்த முன் விரோதத்தில் இவ்வழக்கின் எதிரிகள் அர்ஜுனன் என்பவரையும் அவரது மனைவி சங்கீதா என்பவரையும் தகாத வார்த்தைகளால் திட்டி

கொலை மிரட்டல் விடுத்ததாகவும், அதை நேரில் பார்த்ததாகவும் போலிசார் விசாரரணையில் தெரிவித்து விட்டு தற்போது உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை:**

சண்டையை நேரில் பார்த்தேனா என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.